செ.வெ.எண் : 65 நாள் : 4.7.2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 4.7.2011

கிருஷ்ணகிரி தாலுகா காவல் நிலையத்தில் காவல் துறை உதவி ஆய்வாளராக பணியாற்றி வந்த திரு. சிவக்குமார் அவர்கள் 3.7.2011 அன்று அதிகாலை, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகே உள்ள டோல்கேட்டில் ரோந்துப் பணி மேற்கொண்டிருந்த போது, கிரானைட் ஏற்றி வந்த லாரி மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தி அறிந்து நான் மிகவும் துயருற்றேன். இந்த விபத்தில் அகால மரணமடைந்த திரு. சிவக்குமார் அவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடமையாற்றிக் கொண்டிருந்த போது விபத்தில் உயிரிழந்த காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. சிவக்குமார் அவர்களின் குடும்பத்திற்கு அரசு நிதியுதவியாக 5 லட்சம் ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 2 லட்சம் ரூபாயும் உடனடியாக வழங்கும்படி நான் ஆணையிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்